**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**தே.செ.வெ.எண். 98** **நாள்: 16.04.2026**

**சென்னை மாவட்டத்தில் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ணப் புகைப்படம் மற்றும் சின்னம் உள்ளடங்கிய வாக்குச்சீட்டு பொருத்தும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ. குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.**

தமிழ்நாடு சட்டமன்றப் பொதுத்தேர்தல் 2026னை முன்னிட்டு, சென்னை மாவட்டத்தில் உள்ள 16 சட்டமன்றத் தொகுதிகளான டாக்டர் இராதகிருஷ்ணன் நகரில் 38 வேட்பாளர்களும், பெரம்பூரில் 47 வேட்பாளர்களும், கொளத்தூரில் 35 வேட்பாளர்களும், வில்லிவாக்கத்தில் 28 வேட்பாளர்களும், திரு.வி.க. நகரில் 23 வேட்பாளர்களும், எழும்பூரில் 18 வேட்பாளர்களும், இராயபுரத்தில் 28 வேட்பாளர்களும், துறைமுகத்தில் 23 வேட்பாளர்களும், சேப்பாக்கம்-திருவல்லிக்கேணியில் 26 வேட்பாளர்களும், ஆயிரம் விளக்கு 18 வேட்பாளர்களும், அண்ணாநகரில் 24 வேட்பாளர்களும், விருகம்பாக்கத்தில் 24 வேட்பாளர்களும், சைதாப்பேட்டையில் 15 வேட்பாளர்களும், தியாகராயநகரில் 26 வேட்பாளர்களும், மயிலாப்பூரில் 19 வேட்பாளர்களும், வேளச்சேரியில் 27 வேட்பாளர்களும் என மொத்தம் 419 வேட்பாளர்கள் தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இந்த வேட்பாளர்களின் பெயர், வண்ணப் புகைப்படம் மற்றும் சின்னம் உள்ளடங்கிய வாக்குச்சீட்டுகள் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பொருத்தும் பணி இன்று (16.04.2026) தொடங்கி நடைபெறுகிறது.

இதில் சேப்பாக்கம்-திருவல்லிக்கேணி சட்டமன்றத் தொகுதியில் டாக்டர் பெசன்ட் சாலையில் உள்ள என்.கே. திருமலைச்சாரியார் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, பீமன்னா கார்டன் தெருவில் சென்னை மேல்நிலைப்பள்ளி ஆகிய மையங்களில் நடைபெற்ற மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் வேட்பாளர்களின் பெயர், வண்ண புகைப்படம் மற்றும் சின்னம் உள்ளடங்கிய வாக்குச்சீட்டு பொருத்தும் பணி நடைபெற்றதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாநகராட்சி ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப. அவர்கள், பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

இந்த ஆய்வுகளின்போது, தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**“ தேர்தல் திருவிழா – தமிழ்நாட்டின் பெருவிழா ”**

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**